31—

சிற்ப கலைக்கூடம்

***2441—டாக்டர் வை. முத்துராஜா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் சிற்ப கலைக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரில் சிற்ப கலைக்கூடம் அமைத்துத் தர அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள், இருக்கையில் இல்லை.*

மாண்புமிகு உறுப்பினர் கந்தர்வகோட்டை திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், சிற்பக் கலையில் சிறந்து விளங்கக்கூடிய மாவட்டம். குன்னாண்டார்கோவில், நார்த்தாமலை, விராலிமலை, திருமயம் பகுதிகளில் மலைக் கோட்டைகள் அதிகமாக இருக்கின்றன. சிற்பக் கலையில், உலகத் தரம் வாய்ந்த இசையில், நாடகத்தில், ஓவியத்தில் சிறந்து விளங்கக்கூடிய ஒரு மாவட்டம். ஆகவே, அங்கு ஒரு நுண்ணியல் கலைக் கல்லூரி அமைத்திட தங்கள் வாயிலாகக் கோருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல நார்த்தாமலை, குன்னாண்டார்கோவில் பகுதிகளில் இருக்கக்கூடிய மலைப்*

பாறைகள் சிற்பம் செய்வதற்கான பாறைகள் அல்ல. அவை கோவில் கட்டுமானத்திற்காக இருக்கக்கூடிய பாறைகளாக, அடித்தளம் அமைக்கின்ற பாறைகளாக இருக்கலாம்; கற்பலகைகள் அல்லது நடைமேடைகள் போன்றவற்றைச் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மண் மலை, பொன் மலை, பொம்மை மலை என்பது உள்ளிட்ட ஒன்பது வகையான மலைகள் அங்கே இருக்கின்றன என்பதை நான் அறிவேன். அதில் பார்த்தால், அங்கு இருக்கின்ற மலையின் மேல் பகுதியில் தீ மூட்டி, அதன்மூலம் வெப்பத்தை உருவாக்கி, அதன் வழியாக அந்தக் கற்களையெல்லாம் உடைத்து, அவர்கள் அந்த process செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கற்களை வைத்து சிற்பங்கள் செய்யக்கூடிய அளவிற்கு வாய்ப்பில்லை. நான் குறிப்பிட்ட வகையிலே கட்டடம் மற்றும் அடித்தளம் போன்றவற்றிற்கு அந்தக் கற்களை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் அந்தக் கற்களை வைத்து அங்கே சிற்ப கலைக்கூடம் உருவாக்குவதற்கான அடிப்படையான வாய்ப்பு இல்லை.

ஆனால், அரசின் சார்பிலே, மகாபலிபுரத்தில் சிற்பம் மற்றும் கட்டடவியல் கல்லூரி இயங்கி வருகிறது. அதன் வாயிலாக, மகாபலிபுரத்திலேயே அருமையான சிற்ப கலைக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

32—

மீனவர்களுக்கு வீடுகள்

***167—திரு. S.S. பாலாஜி:**

மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—